சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ,சென்னை-8

ந.க.எண். 9965 /அ5/2023 நாள்: 27.12.2023

பொருள்:- கல்வி - சென்னை மாவட்டம்- கனமழை வெள்ளப்பாதிப்பு - பள்ளிச் சான்றிதழ்கள் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மாணவ/ மாணவியர்களுக்கு கட்டணமின்றி நகல்கள் வழங்க அறிவுரைகள் சார்பு.

பார்வை
1. அரசு செயலர் பள்ளிக் கல்வித் துறை பத்திரிக்கைச் செய்தி
2. இயக்குநர் அரசுத் தேர்வுகள் இயக்ககம் எண் 5581/பி6 நாள். 22.12.2023.

............

பார்வையில் கண்டுள்ள பள்ளிக் கல்வித் துறை அரசுச் செயலர் அவர்களது பத்திரிக்கை செய்திக்கு இணங்க, சென்னை ,செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் காரணமாகவும் தற்போது தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 09.12.2023 ம் நாளிட்ட செய்திக் குறிப்பின்படி மேற்காண் மாவட்டங்களில் கன மழையின் காரணமாக இழந்த சேதமற்ற மதிப்பெண் சான்றிதழ்களில் (10/ +1 / + 2 ) இரண்டாம்படி நகலினை மாணவர்களின் நலன் கருதி எவ்வித கட்டணமின்றி வழங்கிட அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. (அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது).

கனமழையின் 10/ 11 / 12 வது மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த மாணவர்கள் தங்கள் பயின்ற பள்ளியிலேயே இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து மாவட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு எவ்வித கட்டணமின்றி அவர்கள் பயின்ற பள்ளி மூலமாக மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதால் இதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய விவரத்தினை உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து வகை பள்ளிகளின் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. பார்வையில் கண்டுள்ள கடிதம்

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை மாவட்டம்

<u>பெறுநர்:-</u>

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்சென்னை மாவட்டம்.

<u>நகல்:-</u>

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்
2. சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சென்னை-06, அரசுத் தேர்வு இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பப்படுகிறது.